7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. சேலம், சேலம் மாவட்ட மாவுப்பொருள் மற்றும் ஜவ்வரிசி தயாரிப்போர் பணி–தொழிற் கூட்டுறவுச் சங்கம் (ஜவ்வரிசி) மூலம் செய்யப்படுகிற விற்பனை மீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் யாதொரு வணிகர் செலுத்த வேண்டிய வரியைப் பொறுத்த வரையில், வரி வீதத்தில் இரண்டு சதவீதம் குறைத்தது குறித்து வணிக வரித் துறையின் 12–6–2003 ஆம் நாளிட்ட 59 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் விவர அட்டவணையைச் சேர்ந்த C–பகுதியின் 9–ஆம் இனத்தைச் சேர்ந்த (V) துணை இனத்தில் குறிப்பிடப்பட்டவாறு, குன்னூரில் உள்ள "டீசெர்வ்" (Teaserve) என்ற புதிய மையத்தில் விற்பனை செய்யப்படும் தேயிலைக்குச் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்த வரையில், வரி வீதத்தை நான்கு சதவீதமாகக் குறைத்து அறிவிப்பது குறித்து வணிக வரித் துறையின் 29--5--2003 ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. "எத்தனால்" (Ethanol), அதாவது, அன்ஹைடிராஸ் எத்தனால் ஆல்கஹால் (Anhydrous Ethyl Alcohol) மாநிலத்தில் பெட்ரோலுடன் கலப்பதற்காகவும், எத்தனால் கலந்த பெட்ரோலாக (ethanol doped petrol) விற்பனை செய்யப்படுவதற்காகவும், குறிப்பிட்ட சில எண்ணெய் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும்போது அவ்விற்பனையின்மீது வணிகர் ஒருவர் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ், செலுத்தத்தக்க வரி வீதத்தை எட்டு சதவீதமாகக் குறைப்பது குறித்தும், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தைச் சேர்ந்த பதினோராவது (Eleventh) விவர அட்டவணையில் திருத்தம் செய்தது குறித்தும், வணிக வரித் துறையில் 1–4--2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின், சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1) /வ.வ/19 (e–4)/2002 ஆம் எண் அறிவிக்கை மற்றும் 27–3–2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில்

2004 பிப்ரவரி 5]

வெளியிடப்பட்ட II (1)/வவ/19(b–8)/2002 ஆம் எண் அறிவிக்கை ஆகியவற்றில் மாற்றங்கள் செய்தது குறித்தும் வணிக வரித் துறையின் 1–10–2003 ஆம் நாளிட்ட 142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்புச் சட்டத்தைச் சேர்ந்த விவர அட்டவணையில் திருத்தங்கள் செய்தது குறித்தும், உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் "எத்தனால்," அதாவது அன்ஹைடிரஸ் எத்தனால் ஆல்கஹால் (Anhydrous Ethyl Alcohol) கொண்டு வரப்படுவதன்பேரில் 2001–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டு, வசூலிக்கப்பட வேண்டிய வரிவீதத்தை எட்டு சதவீதமாக நிர்ணயிப்பது குறித்தும், வணிக வரித் துறையின் 27–3–2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II(2)/வ.வ/313 (e–4)/2002 ஆம் எண் அறிவிக்கை மற்றும் II (2)/வ.வ/313 (e–2)/2002 ஆம் எண் அறிவிக்கை ஆகியவற்றில் திருத்தங்கள் செய்தது குறித்தும் வணிக வரித் துறையின் 1–10–2003 ஆம் நாளிட்ட 143 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் [2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களைக் கொண்டு வருவதன் மீதான வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/2001) 14 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் விதி 2 (m)–ல் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 28–8–2003 ஆம் நாளிட்ட 253 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. 1988ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் விதி 75–ன் துணை விதி (1)–ல் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 10–9–2003 ஆம் நாளிட்ட 258 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2004 பிப்ரவரி 5

7. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளில் விதி 73(1)–ல் திருத்தம் செய்தது குறித்து கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 15–9–2003 ஆம் நாளிட்ட 264 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 180 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

8. 1987 ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்றங்கள் (தமிழ்நாடு) விதிகளில் விதி 7–ல் திருத்தம் செய்தது குறித்து உள் (நீதிமன்றம்–2) துறையின் 17–11–2003 ஆம் நாளிட்ட 1074 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1984 ஆம் ஆண்டு குடும்ப நீதிமன்றங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 66/1984) 23(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. கிணறுகளை ஆழப்படுத்தும் அமுத்தான்கள் (கம்ப்ரெசர்கள்) பொருத்தப்பட்ட டிராக்டர்கள் பொறுத்தவரையிலான வரித் தொகை, கிணறுகளை ஆழப்படுத்துவதற்கென்றே அவை பயன்படுத்தப்படுகின்ற வரையில் 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின்கீழ் விதிக்கத்தக்க இயல்பான வரி வீதத்தில் வரக்கூடிய மூன்றில் ஒரு பங்கு என்ற வீதத்தில் 1–4–1994 ஆம் நாளன்றும், அந்நாளிலிருந்தும் தொடங்கி 30–9–2002 ஆம் நாள்வரையில் ஆண்டு வாரியாக வசூலிக்கப்பட வேண்டும் என்று உத்திரவிட்டது குறித்து உள் (போக்குவரத்து–1) துறையின் 19–2–2003 ஆம் நாளிட்ட 160 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

10. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு (திருத்த) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/2003) 4 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) ஆம் பகுதி மற்றும் (3) ஆம் பகுதியைச் சேர்ந்த (ii) துணைப்பகுதி ஆகியவை நீங்கலாக அனைத்துப் பிரிவுகளும் 1–8–2003 ஆம் நாள் முதல் செயலுக்கு வரும் என நிர்ணயிக்கப்பட்டது குறித்து உள் (போக்குவரத்து–1) துறையின் 31–7–2003 ஆம் நாளிட்ட 649 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2004 பிப்ரவரி 5]

11. 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரி விதிப்பு விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (போக்குவரத்து–1) துறையின் 31–7–2003 ஆம் நாளிட்ட 650 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

12. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீரியம் குறைந்த சாராவி, மெதில் ஆல்கஹால் மற்றும் வார்னீஷ் (பிரிஞ்சு பாலீஷ்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறையின் 29–4–2003ஆம் நாளிட்ட 100 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

13. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு வீரியம் குறைந்த சாராவி, மெதில் ஆல்கஹால் மற்றும் வார்னீஷ் (பிரிஞ்சு பாலீஷ்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 7–7–2003 ஆம் நாளிட்ட 128 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

14. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் விருதுநகர் மாவட்டம், கொட்டக்காச்சியேந்தல் கிராம ஊராட்சி, மதுரை மாவட்டம், கீரிப்பட்டி கிராம ஊராட்சி மற்றும் நாட்டார்மங்கலம் கிராம ஊராட்சிகளுக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையர்களை தனி அலுவலர்களாக நியமனம் செய்தது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 22–10–2003–ஆம் நாளிட்ட 219 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

15. 2002–2003 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தி ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

[2004 பிப்ரவரி 5

16. 2000–2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

17. 2002–2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் நாற்பத்தி ஐந்தாவது ஆண்டறிக்கை [1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31 (11) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

18. 2001–2002 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. குன்னூரில் உள்ள "டீசெர்வ்" (Teaserve) *என்ற புதிய ஏல மையத்தில் மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்படும் தேயிலைக்கு 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ் செலுத்தத்தக்க வரியினை, C–படிவம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இரண்டு சதவீதமாகக் குறைக்க ஆணையிட்டது குறித்து வணிகவரித் துறையின் 29.5.2003 ஆம் நாளிட்ட 48 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.*

2. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) அவசரச் சட்டம் தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2004)

3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையாற்றும்போது பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறை பற்றிய புத்தகம். (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

4. 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 4–ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

5. சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட (2002 ஆம் ஆண்டு குற்ற வழக்கு விசாரணை முறை (தமிழ்நாடு இரண்டாம் திருத்தத்) தொகுப்புச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2002) மற்றும் ஆளுநர் அவர்களின் செய்தியும்.